பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலர் 5, பகுதி14, வார்டு 61 எழும்பூர் வெங்கு தெருவில் மாமன்ற உறுப்பினர் நிலைக்குழு உறுப்பினர் கல்வி ஏ.எஸ். பாத்திமா முசப்பர் எம்.சி. 2022 –23 ஆம் ஆண்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.30,00,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட உடற்பயிற்சிக் கூட கட்டடம், பெருநகர வளர்ச்சி குழுமத் தலைவர் மற்றும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் ஆகியோரால் இணைந்து திறக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பெருநகர மேயர் பிரியாராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, 5வது மண்டல குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் சொ. வேலு, எழும்பூர் தொகுதி பகுதி செயலாளர் வி.சுதாகர், 61வது வட்ட கழகச் செயலாளர் டால்பின் எஸ்.ஹரி, 61வது (அ) வட்ட கழகச் செயலாளர் இ.மொய்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சுமார் 1144 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.54,79,320/– மதிப்பீட்டில் 30.07.2024 செவ்வாய்கிழமை மாலை 4.00 மணியளவில் அம்பத்தூரில் உள்ள பெருந்தலைவர் காமராசர் அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில், முதன்மைக் கல்வி அலுவலர் சா.மார்ஸ் வரவேற்புரையில், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. முன்னிலையில் இந்து சமய அறநிலையத்துறை சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு பள்ளி மாணவ – மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார்.

நலிந்த பிரிவினர் - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - எஸ்.சி. - எஸ்.டி. பிரிவுத்

தொழில் முனைவோர்க்கு எளிதாக நிதியுதவி கிடைக்க ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா?

மாநிலங்களவையில் - மு.சண்முகம் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 1-

மாநிலங்களவையில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளருமான மு.சண்முகம் எழுப்பிய கேள்வி வருமாறு:

நலிந்த பிரிவினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், எஸ்.சி. மற்றும் எஸ்.டி. பிரிவினர் ஆகிய தொழில் முனைவோர்க்கு எளிதாக நிதியுதவி கிடைப்பது குறித்து அரசு ஏதேனும் மறு ஆய்வு செய்திருக்கிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

நிதியைப் பெறுவதில் தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு கடன் வழங்குவதற்கான அளவுகோல்கள் எளிமையாக்கப்பட்டு வங்கிகளின் சுற்றுச்சூழல் அமைப்பு பலப்படுத்தப்படுமா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு ஒன்றிய அரசின் நிதி இணையமைச்சர் ஸ்ரீபங்கஜ் சௌத்திரி அளித்த பதில் வருமாறு:

கட்டுப்பாடற்ற கடன் சூழலில், கடன் வசதிகள் தனிப்பட்ட வங்கி வாரியங்களின் அங்கீகரிக்கப்பட்ட கடன் கொள்கைகள் ஆகியவை ரிசர்வ்

வங்கியின் (RBI) தற்போதைய வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

அனைத்து கடன்களுடன் இணைக்கப்பட்ட திட்டங்களையும் அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதி (SC) மற்றும் பழங்குடியினர் (ST) ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள், பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த தொழில்முனைவோருக்கு எளிதாக நிதியுதவி கிடைப்பதை எளிதாக்கும் வகையில் பல முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

அவற்றில் சில 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் தேதி ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் (SUPI) தொடங்கப்பட்டது, இதன் மூலம் உற்பத்தி, சேவைகள் அல்லது வர்த்தகத் துறை மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய செயல்பாடுகளுக்கு ஒரு கிரீன்ஃபீல்ட் நிறுவனத்தை அமைப்பதற்காக ஒரு வங்கிக் கிளையில் குறைந்த பட்சம் ஒரு பட்டியல் சாதி (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மற்றும் ஒரு பெண் கடன் வாங்குபவருக்கு ரூ.10 லட்சம் மற்றும் ரூ.1 கோடி வரை வழங்கப்படுகிறது.

2019-20 யூனியன் பட்ஜெட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், இந்தத் திட்டம் 2025 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது.

2015 ஆம் வருடம் ஏப்ரல் 8 ஆம் தேதி அன்று தொடங்கப்பட்ட பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) கீழ் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், எஸ்சி மற்றும் எஸ்டி பிரிவைச் சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கு பிணையில்லாமல் தங்கள் வணிக நடவடிக்கைகளை அமைக்க அல்லது விரிவாக்க 10 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது.

மேலும், ஆர்பிஐ முன்னுரிமைத் துறை கடன் வழங்குதல் (பிஎஸ்எல்) வழிகாட்டுதல்களை வடிவமைத்துள்ளது, இது கடன் தகுதியுடையதாக இருந்தாலும், வங்கி அமைப்பில் இருந்து போதுமான கடன் கிடைக்காத பிரிவுகளுக்கு கடன் வழங்குவதை எளிதாக்குகிறது. ஆர்பிஐ 40% சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கிரெடிட் (ANBC) அல்லது பி.எஸ்.எல்.லுக்கான ஆஃப்-பேலன்ஸ் ஷீட் எக்ஸ்போஷர்களுக்கு (CEOBE) சமமான கிரெடிட் இலக்கை நிர்ணயித்துள்ளது.

இதில் 12% தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு கடன் வழங்க கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது, இதில் பட்டியல் சாதியினர் (எஸ்சி) மற்றும் பழங்குடியினர் (எஸ்டி), சிறு மற்றும் குறு விவசாயிகள், கைவினைஞர்கள், பயனாளிகள் ஆகியோர் அடங்குவர்.NRLM/NULM, SHGகள், சிறுபான்மை சமூகங்கள் போன்றவை.

ரிசர்வ் வங்கியின் தகவலின்படி, 2023-24 நிதியாண்டில் பலவீனமான பிரிவினருக்கான முன்னுரிமை துறை கடன் (பிஎஸ்எல்) கீழ் 13.53% சாதனை படைத்துள்ளது.

மத்திய அல்லது மாநில அரசால் அவ்வப்போது வகுக்கப்பட்ட திட்ட வழிகாட்டுதல்களின்படி, அனைத்து வங்கிகளும் பட்டியல் சாதியினரின் கடன் வாங்குபவர்களுக்கு சலுகைக் கடன்களை வழங்குகின்றன.

இவ்வாறு ஒன்றிய அரசின் நிதி இணையமைச்சர் ஸ்ரீபங்கஜ் சௌத்திரி பதிலளித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு மையத்தில் - அமைச்சர் சி.வெ.கணேசன்

டி.என்.பி.எஸ்.சி. குரூப் 2 பயிற்சி வகுப்புகளை ஆய்வு!

திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர் ஆக. 01

திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு நடைபெற்று வரும் டி என்.பி.எஸ்.சி. குரூப் 2 பயிற்சி வகுப்புகளை ஆய்வு செய்து பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறரர். அந்த வகையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி 1, 2, 4 ஆகிய தேர்வு, ஒன்றிய அரசின் தேர்வுகளான ஸ்டாப் செலக்சன் கமிஷன் ரயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்டு எம் எல் சி போன்ற ஒன்றிய அரசின் வேலைக்கான பயிற்சி வகுப்புகள் இங்கு நடத்தப்பட்டு வருகின்றன. தொழிற்படிப்புகள் படித்தால் மட்டுமே வேலை கிடைக்கும் என்ற நிலையை மாற்றி கலை மற்றும் அறிவியல் கல்லூரி குரூப் படித்தவர்கள் இந்த பயிற்சியின் மூலம் பெருமளவில் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர்.

ஒன்றிய அரசின் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் தமிழ்நாட்டில் 14 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர் என்ற தகவலை தெரிவித்துள்ளது. முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று மாணவர்கள் வேலை வாய்ப்புகளை பெற்று வருகின்றனர். ஆகவே இந்த பயிற்சி வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் கடின உழைப்புடன் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். உங்கள் முயற்சியை நான் கைவிடாதீர்கள். முயற்சியும் பயிற்சியும் இருந்தால் தேர்வில் வெற்றி பெற்று நீங்கள் விரும்பும் வேலையை பெறுவீர்கள்.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பயிற்சி பெறும் மாணவ மாணவியர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தமிழ் இலவச பாடத்தொகுப்பு கையேட்டினை மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார்

இந்நிகழ்வில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர், மண்டல இணை இயக்குனர் (வேலை வாய்ப்பு) ஆர். பிரபாகரன், உதவி இயக்குநர்கள் விஜயா, (மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் ரவிந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணைத் தலைவர் சி.சு. ரவிச்சந்திரன், மற்றும் (மாவட்ட திறன் பயிற்சி) அலுவலர்கள் உள்ளனர்.

ஒன்றிய அரசு நிதி தராவிட்டாலும்

தமிழ்நாட்டு மக்களை கவனமாகப் பாதுகாத்து வருகிறார் முதல்வர்!

பெரம்பலூர் - கொளக்காநத்தம் பொதுக் கூட்டத்தில் அரசு கொறடா கோவி.செழியன் பேச்சு!

பெரம்பலூர், ஆக. 1 -

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், கொளக்காநத்தம் கிராமத்தில் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம் கிளைக் கழக செயலாளர் என். ராகவன் வரவேற்புரையில் நடைபெற்று.

கூட்டத்திற்கு ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், ஆலத்தூர் ஒன்றிய குழு தலைவருமான என். கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் வீ. ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடாவும், மாநில வர்த்தக அணி துணை தலைவருமான கோவி.செழியன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

அப்போது அவர் பேசியது வருமாறு:

விக்கிரவாண்டி பா.ம.க. பெல்ட் என எல்லோரும் சொன்னார்கள். ஜாதி அரசியல் இங்கு எடுபடாது என்று தி.மு.க. நிரூபித்து ள்ளது. ஒன்றிய அரசு நிதி தராவிட்டாலும் கவலை இல்லை. இந்த ஏழை மக்களை பாதுகாப்பேன் என நம்ம வீட்டுப் பெண்கள் 1.25 கோடி பேருக்கு கலைஞரின் உரிமைத் தொகை மாதம் ஆயிரம் ரூபாய் முதல்வர் மு.க.ஸ்டாலின்

வழங்குகிறார்.

தி.மு.க.விடம் மற்ற கட்சிகள் போட்டி போட முடியவில்லை. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் அனைத்து தொகுதிகளும் தி.மு.க. கைப்பற்றியது இதுவே உதாரணமாகும்.

விரைவில் உள்ளாட்சித் தேர்தல், கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் மீண்டும் தி.மு.க. சாதனை படைக்கும். எடப்பாடி பதுங்குகிறார், சசிகலா ஊர்வலம் வர பார்க்கிறார். ஒரு ஆளுநர் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு பா.ஜ.க. சார்பில் தேர்தலில் போட்டியிட்ட மாநிலம் இந்த தமிழ்நாடு தான் வெட்கக்கேடாக இல்லையா, 2 மாநிலத்துக்கு ஆளுநராக இருந்தவர் டெபாசிட் வாங்க முடியவில்லை. ஒரு எம்.எல்.ஏ., எம்.பி. தேர்தலில் நிறுத்தினார் அதனால் ரூ.4 கோடி லஞ்ச வழக்கில் சிக்கித் தவிக்கிறார் இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத், பொதுக்குழு உறுப்பினர் ந. ஜெகதீஸ்வரன், பெரம்பலூர் ஒன்றிய செயலாளர் எம்.ராஜ்குமார்,

வேப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் தி. மதியழகன், வேப்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சி.

ராஜேந்திரன், வேப்பந்தட்டை ஒன்றிய குழு தலைவர் க. ராமலிங்கம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், மா.பிரபாகரன், அ.அப்துல் கரீம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், கிளை கழக நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கிளைக் கழக செயலாளர் ராகவன் அனைவரையும் வரவேற்றார். முடிவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ. சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தாயார் மறைவெய்திய செய்தி அறிந்து அவருடைய இல்லத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். சட்டமன்ற உறுப்பினர்கள் சோழிங்கநல்லூர் எஸ்.அரவிந்தரமேஷ் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., பகுதிக் கழகச் செயலாளர் 15வது மண்டல குழு தலைவர் வி.எம்.மதியழகன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி, வட்டச் செயலாளர்கள், இளைஞர் அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் சென்று அஞ்சலி செலுத்தினர்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில்

மண்டல அளவிலான இளைஞரணி சமூக வலைதள பயிற்சிக் கூட்டம்!

ஒய்.பிரகாஷ் – தே.மதியழகன் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஆக. 1-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது ஆலோசனைப்படி திமுக இளைஞரணி மண்டலம் 3, மற்றும் 4 மண்டலங்களுக்கான மாநில, மாவட்ட, மாநகர, அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தள பயிற்சி முகாம் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் குந்தாரப்பள்ளியில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்டச் செயலாளர்கள் பிரகாஷ் எம்.எல்.ஏ., மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோரது தலைமையில் நடைபெற்ற இந்த சமூக வலைத்தள பயிற்சி கூட்டத்தில் மாநில இளைஞரணி செயலாளர்கள் சீனிவாசன், பிரபு கஜேந்திரன், முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் உரையாற்றும் பொழுது கழகத் தலைவர் தமிழக முதல்வர் மக்களின் நலன் கருதி பல உன்னத திட்டங்களை வழங்கியுள்ளார். தமிழ்நாட்டின் 8 கோடி மக்களின் வளர்ச்சி, உ.பி.,யின் 24 கோடி மக்களின் வளர்ச்சிக்கு இணையாக உள்ளது. தமிழ்நாடு சாலை, சுகாதாரம், கல்வி என அனைத்து துறைகளிலும் நாட்டில் முதலிடம் பெற்றுள்ளது.

இதை ஏற்றுக்கொள்ள முடியாத சிலர், இந்த ஆட்சி குறித்து சமூக வலைதளங்களில் கொச்சைபடுத்தி வருகின்றனர். அவர்களை நாம் ஒன்றிணைந்து சேர்ந்து தடுக்க வேண்டும். அந்த பொறுப்பை இளைஞரணியிடம் இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தந்துள்ளார்.

இவ்வாறு அவர் பேசினார் இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ் உரையாற்றும் போது நான் முத்தமிழ் அறிஞர் கலைஞர், மாண்புமிகு கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர், இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான மாண்புமிகு சின்னவர் காலங்களில் எம்.எல்.ஏ., வாக இருந்து விட்டேன். அதே போல் நீங்களும் அடுத்த மூன்று தலைவர்களுடன் எம்.எல்.ஏ., க்களாக இருக்க வேண்டும். நம்மை பற்றி சமூக வலைதளம் எனும் போர்களத்தில் போரில் எதிரிகளை வீழத்துவது போல் இழிவாக பேசியவர்களை அடக்கி, தக்க பதிலடி கொடுப்பது போல் லோக்சபாவில் 40க்கு 40 பெற்றது போல், சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெல்லும் வகையில் சமூக வலைதளங்களை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து சமூக

வலைதள பயிற்சியாளர்கள் சூர்யா கிருஷ்ண மூர்த்தி, இளமாறன், யுவ கிருஷ்ணா ஆகியோர் இளைஞரணி நிர்வாகிகளுக்கு சமூக வலைதள பயிற்சிகளை அளித்தனர். கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ்ராஜன் நன்றி கூறினார். மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பயிற்சி கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியம் தேர்வாய் ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து தீர்வு காணப்பட்டு சான்றிதழ்களை மாவட்ட கழக செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் மு.மணிபாலன், பா.முத்துசாமி, இரா.அறிவழகன், ஜி.ரவிக்குமார், கா.சு.ஜெகதீசன், ஊராட்சி மன்ற தலைவர் எம்.முனிவேல், ஒன்றியக்குழு உறுப்பினர் கலாஉமாபதி, எஸ்.ராமஜெயம், மு.பாஸ்கரன், எஸ்.கே.பூபாலன், எஸ்.உதயகுமார், மனோகரன், இ.இளங்கோ, ராஜீ, சுரேஷ், அருள், ஜீவா, அசோக், முருகன், தீலிபன், இளங்கோ, தினேஷ், அருண்குமார், அன்பரசன், ராஜேஷ் கோபால், சுப்பிரமணி முனிவேல், பொன்னுசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.